2017

**சுருக்கம்**

தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939 – திரைப்படங்கள் – கேளிக்கை வரி விலக்களிக்க அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரையை ஏற்று, தேர்தல் நடைபெறவுள்ள டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற தொகுதி தவிர்த்து சென்னை மாவட்டத்தின் பிற பகுதிகளில், **"புரூஸ் லீ"** தமிழ் திரைப்படத்திற்கு கேளிக்கை வரிவிலக்கு அளித்து – ஆணை – வெளியிடப்படுகிறது.

**வணிகவரி மற்றும் பதிவு (சி1) த்துறை**

**அரசாணை (டி) எண்.157**

**நாள்: 06.04.2017**
**துன்முகி, பங்குனி 24,**
**திருவள்ளுவர் ஆண்டு, 2048**
**படிக்கப்பட்டது:–**

1. திருவாளர். கெனன்யா பில்ம்ஸ் நிறுவனத்தாரின் 15.03.2017–ஆம் நாளிட்ட கடிதம்.
2. அரசாணை (டி) எண்.121, வணிகவரி மற்றும் பதிவுத் (சி1) துறை, நாள் 17.03.2017.
3. பொதுத் (தேர்தல்) துறையிடமிருந்து பெறப்பட்ட குறிப்பு, நாள் 23.03.2017.

-----

**ஆணை:–**

மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், கேளிக்கை வரி விலக்களிக்க அமைக்கப்பட்ட குழுவின், பார்வையிட்ட பெரும்பான்மையான உறுப்பினர்களின் பரிந்துரையை ஏற்றும், பொதுத் (தேர்தல்) துறை வழங்கிய இசைவின் அடிப்படையிலும், தேர்தல் நடைபெறவுள்ள சென்னை மாவட்டம் தவிர்த்து தமிழகத்தின் பிற மாவட்டங்களில், **"புரூஸ் லீ"** தமிழ் திரைப்படத்திற்கு கேளிக்கை வரியிலிருந்து விலக்களித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. திருவாளர். கெனன்யா பில்ம்ஸ் நிறுவனத்தார் முதலாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், **"புரூஸ் லீ"** தமிழ் திரைப்படத்திற்கு, தேர்தல் நடைபெறவுள்ள டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற தொகுதி தவிர்த்து சென்னை மாவட்டத்தின் பிற பகுதிகளில் கேளிக்கை வரிவிலக்கு அளிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையை தொடர்ந்து, பொதுத் (தேர்தல்) துறை வழங்கிய இசைவின் அடிப்படையிலும், **"புரூஸ் லீ"** திரைப்படத்தின் தயாரிப்பாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்கவும், தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939–ன் பிரிவு 8, உட்பிரிவு 2–ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை பயன்படுத்தி, தற்போது தேர்தல் நடைபெறவுள்ள டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற தொகுதி தவிர்த்து சென்னை மாவட்டத்தின் பிற பகுதிகளில், **"புரூஸ் லீ"** தமிழ் திரைப்படத்திற்கு ஆணையிடப்படும் நாள் முதல் கேளிக்கை வரியிலிருந்து விலக்களித்து ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

4. டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற தொகுதியில் **"புரூஸ் லீ"** தமிழ் திரைப்படத்தினை திரையிடுவதன் மூலம் வசூலிக்கப்படும் கேளிக்கை வரியினை அரசுக்கு செலுத்த வேண்டும் எனவும் ஆணை பிறப்பிக்கப்படுகிறது. இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உரிய அறிவுறுத்தல்களை வழங்குமாறு கூடுதல் தலைமைச் செயலாளர்/வணிகவரி ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

முனைவர் ச.சந்திரமௌலி,
கூடுதல் தலைமைச் செயலாளர் (முகூபொ)

<u>பெறுநர்</u>

கூடுதல் தலைமைச் செயலாளர்/ வணிகவரி ஆணையர், சேப்பாக்கம், சென்னை-5.
செயலாளர், தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை, சென்னை-9.
இயக்குநர், தமிழ்வளர்ச்சி துறை, சென்னை-8.
சம்பந்தப்பட்ட படத்தயாரிப்பாளர்.

**நகல்:**

சிறப்பு நிலை நேர்முக உதவியாளர்,
அமைச்சர் (வணிகவரி) அலுவலகம், சென்னை-9.
வணிகவரி மற்றும் பதிவு (அநமு) பிரிவு, சென்னை-9.
சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறை, சென்னை-9.
பொதுத்(தேர்தல்) துறை, சென்னை-9.
இருப்புக்கோப்பு / உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

செ. முரளிகிருஷ்ணன்
பிரிவு அலுவலர்.
6.4.17